அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2024/2025

## தமிழ் - ஆண்டு 11

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

கலை இலக்கியங்கள் எந்தளவுக்கு முதன்மை பெற்றுள்ளனவோ அந்தளவுக்குத் திறனாய்வுகளும் அகத்தியமானவையாகக் கருதப்படுகின்றன. ஆயினும் தமிழ்க்கலை இலக்கியங்கள் வளர்ந்த அளவோடு ஒப்பிடுகையில் திறனாய்வுக்கலை போதியளவு வளர்ச்சி பெறவில்லை என்ற பேச்சு நிலவி வருவதைக் கவனிக்கலாம். திறனாய்வு குறித்து பல நூல்கள் வெளிவந்தபோதும் அது பற்றிய போதுமான புரிதலின்மை இன்றும் உள்ளது. படைப்பாளிக்கும் வாசகருக்குமிடையில் தொடர்பை வலுப்படுத்துவதோடு மேலதிக விளக்கங்களை ஏற்படுத்துவதாயும் திறனாய்வு திகழவேண்டும். இதற்குத் தடையாகப் படைப்பாளர்கள் திறனாய்வைப் புரிந்து கொள்ளும் முதிர்ச்சி இன்மையால் திறனாய்வுக்கலை வளர்ச்சி பெற இயலாதுள்ளது. படைப்பாக்கங்கள் பட்டறிவுச் செழுமைகளை உணர்வெழுச்சியுடன் வெளிப்படுத்துவன. படைப்பாளி தன் வாழ்க்கைப் பட்டறிவிலிருந்து ஏனையவர்களது வாழ்வைச் செப்பனிடுவதற்கு ஏற்றதாகப் படைப்பாக்கம் மிளிரவேண்டும். அந்தவகையில் அவை குறித்த கருத்துகள் குமுகத்தில் உணர்வைத் தூண்டும் சிறு பொறிகள் போன்று அமைகின்றன. நல்ல படைப்புகள் மாந்தரின் மனங்களைத் தூய்மைப்படுத்துகின்றன என்பதே உண்மை.